## வாரத்தில் ஓர் முத்து!

23 பெப்ரவரி 2010 சகரியா பூணன்

# 43. பாவத்தில் விடுதலைபெற "மாம்சம் சிலுவையில் பாடுபட" வேண்டும்!

தன் குமாரனை, அவரின் 33 1/2 வருட பூலோக வாழ்விலும், மாம்சத்தின் மூலமாய் வரக்கூடிய எல்லாவிதமான சோதனைகளிலும் தேவன் முழுமையாக நடத்திக்கொண்டு சென்றார். அந்த ஒவ்வொரு சோதனைகளிலும் இயேசு பூரண வெற்றியடைந்து ஜொலித்தார்! எப்படியெனில், ஒவ்வொரு சோதனையிலும் இயேசு தன்னைத்தானே சுத்தவானாய் காத்துக்கொண்டார்! மாம்சத்தின் இச்சைகள் அவரின் இதயத்துக்குள் பிரவேசித்திட அவர் கொஞ்சமும் இடம் தரவேயில்லை. பாவத்தைப் பிறப்பிக்க வகைசெய்யும் ஒவ்வொரு இச்சையும் மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டது!! (ரோமர் 8:3). இயேசு மாம்சத்தில் இருந்த நாட்களெல்லாம் கற்ற மேலான கல்வி இதுதான். ஆம், அவர் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர் 5:8). என்ன பாடுகள்? மாம்சத்தை வெறுப்பதால் அடையும் "மாம்சத்திலே உண்டாகும் பாடுகள்" (Suffering in the Flesh). இப்பாடுகளே, பாவத்திலிருந்து பரிபூரணமாய் விடுதலையடைந்து ஜீவிக்கும் ஓர் உன்னத ஜீவியத்திற்கு நம்மை நடத்திச் செல்லுகிறது (1பேதுரு 4:1,2).

இப்படியாக இயேசு கல்வாரிச் சிலுவையை அடைந்தபோது எல்லா பாவங்களுமே அவரது மாம்சத்தில் நியாயந்தீர்க்கப்பட்டு விட்டது! இப்போது இயேசு மாம்சத்தில் இருந்த நாட்களில் எப்படி நடந்தாரோ அதைப்போலவே நடக்கவேண்டும்! உலகத்தின் பாவங்களுக்குப் பரிகாரமாக இயேசு மரித்தாரே, அதில் நாம் எந்தப் பங்கும் எடுக்கமுடியாது...... அந்தப் பாதையில் நடக்கவும் முடியாது. ஆனால் இயேசு பூமியில் இருந்த நாட்களிலெல்லாம் தன் மாம்சத்தில் தொடர்ச்சியாக மரித்தாரே, **அந்த மரணத்தில்** (மாம்சத்தில் உண்டாகும் பாடுகளில்) நமக்குப் பங்குண்டு! இப்படித்தான் நாம் இயேசுவின் ஜீவியமாகிய திவ்ய சுபாவத்தில் பங்கு பெறுகிறோம்.

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 )